**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.**

முன்னிலை: திரு.S.வேல்சூர்யா,B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருச்சுழி.
2026 ம் ஆண்டு மே மாதம் 21ம் நாள் வியாழக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.150/2023**

**CNR.No.TNVR200037902023**

*****

| | | |
|---|---|---|
| 1. | நீதிமன்றத்தின் பெயர் | மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி. |
| 2. | நீதித்துறை நடுவரின் பெயர் | திரு.S.வேல்சூர்யா,B.A.,B.L., |
| 3. | தீர்ப்பு தேதி | 21.05.2026 |
| 4. | சி.எண்.ஆர்.எண் | TNVR200037902023 |
| 5. | வழக்கின் தரப்பினர்களின் பெயர் | அரசு தரப்பில் திருச்சுழி காவல் நிலைய சார்பு ஆய்வாளர், குற்ற எண்.211/2021<br>/எதிர்/<br>1) முனியசாமி – (25/22)<br>த/பெ.இருளன்,<br>காளியம்மன் கோவில் தெரு,<br>மேலகுருணைகுளம்,<br>அருப்புக்கோட்டை தாலுகா.<br>2) பிச்சையம்மாள் – (52/22)<br>க/பெ.இருளன்,<br>காளியம்மன் கோவில் தெரு,<br>மேலகுருணைகுளம்,<br>அருப்புக்கோட்டை தாலுகா. |
| 6. | சம்பவம் நடந்த நாள் | 07.10.2021 |
| 7. | புகார் கொடுத்த நாள் | 08.10.2021 |
| 8. | கைது செய்யப்பட்ட தேதி மற்றும் ரிமாண்ட் ஏதேனும் | எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் |

| | | |
|---|---|---|
| | இருந்தால் | உத்தரவு CRL OP(MD).No.15837/2021, நாள்.12.10.2021–ன்படி முன்பிணை பெற்று, 08.11.2021ம் தேதியன்று திருச்சுழி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்து சென்றுள்ளனர். |
| 9. | குற்றம் சாட்டப்பட்டவரின் காவல் காலம் | இல்லை |
| 10. | ஜாமீனில் விடுவிக்கப்பட்ட நாள் | எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவு CRL OP(MD).No.15837/2021, நாள்.12.10.2021–ன்படி முன்பிணை பெற்று, 08.11.2021ம் தேதியன்று திருச்சுழி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்து சென்றுள்ளனர். |
| 11. | குற்ற இறுதியறிக்கை நாள் | 05.01.2022 |
| 12. | வழக்கு மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்ட நாள் | இல்லை |
| 13. | குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 281–ன் கீழ் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரை விசாரித்த நாள் | 28.12.2023 |
| 14. | சாட்சிகளின் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விபரம் | (see table below) |
| 15. | கு.வி.மு.ச. பிரிவு 317–ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, | இல்லை |

| | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அ.சா.1 | 02.02.2024 | 02.02.2024 |
| அ.சா.2 | 02.02.2024 | 02.02.2024 |
| அ.சா.3 | 21.11.2025 | 21.11.2025 |
| அ.சா.4 | 08.12.2025 | 08.12.2025 |
| அ.சா.5 | 21.01.2026 | 21.01.2026 |
| அ.சா.6 | 11.02.2026 | 11.02.2026 |

| | | |
|---|---|---|
| | மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல் முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட | |
| 16. | கு.வி.மு.ச. பிரிவு 313–ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவரை கேள்வி கேட்ட நாள் | 25.02.2026 |
| 17. | குற்றஞ்சாட்டப்பட்டவர் தலைமறைவான தேதி, பிடிபட்ட/ஆஜரான தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவு CRL OP(MD).No.15837/2021, நாள்.12.10.2021–ன்படி முன்பிணை பெற்று, 08.11.2021ம் தேதியன்று திருச்சுழி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்து சென்றுள்ளனர். |
| 18. | மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள் | இல்லை |
| 19. | விசாரணை தொடங்கிய நாள் | 05.02.2024 |
| 20. | விசாரணை முடிந்த நாள் | 12.05.2026 |
| 21. | தண்டனை அல்லது உத்தரவு நாள் | 21.02.2026 |
| 22. | குற்றவாளிகளுக்கு தீர்ப்பின் நகலை வழங்கிய நாள் | விடுதலை தீர்ப்பு அதனால் நகல் வழங்கப்படவில்லை |
| 23. | தாமதம் ஏற்பட்டால் விளக்கம் அளிக்கவும் | தாமதம் இல்லை. |

| | |
|---|---|
| குற்றமுறையீட்டாளர் | அரசு தரப்பில் திருச்சுழி காவல் நிலைய சார்பு ஆய்வாளர், குற்ற எண்.211/2021 |

| | |
|---|---|
| அரசு தரப்பில் எதிரிகள் மீது சாட்டப்பட்ட குற்றம் | 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன் கீழும், 2வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)–ன் கீழும் சாட்டப்பட்டுள்ளது. |
| நீதிமன்றத்தால் எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றம் | 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324 (2 எண்ணிக்கை), 506(2) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன் கீழும், 2வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)–ன் கீழும் வனையப்பட்டுள்ளது. |
| எதிரிகளின் பதில் | பொய் வழக்கு |
| நீதித்துறை நடுவரின் பதில் | 1வது எதிரி இதச பிரிவுகள் 294(பி), 324 (2 எண்ணிக்கை), 506(2) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன் கீழும், 2வது எதிரி இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)–ன் கீழும் குற்றவாளிகள் அல்ல |
| அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – I | திரு.செந்தில்குமார்,B.A.,B.L., |
| எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | திரு.B.கார்க்கிசெல்வம்,B.A.,B.L., |
| இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட நாள் | 12.05.2026 |
| தீர்ப்பு வழங்கப்பட்ட நாள் | 21.05.2026 |

இவ்வழக்கு 17.07.2023–ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் சி.சி.150/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 12.05.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–1 திரு.செந்தில்குமார்,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.கார்க்கிசெல்வம்,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

1. **<u>குற்ற இறுதியறிக்கையின் சுருக்கம்</u>:–**

கடந்த 07.10.2021ம் தேதி மதியம் 12.30 மணிக்கு வாதி அ.சா.1 குருவம்மாள் தனது வீட்டிற்கு முன்பாக பாத்திரம் விலக்கி கொண்டிருந்தபோது இருசக்கர வாகனத்தில் வந்த 1வது எதிரி முனியசாமி இருசக்கர வாகனத்தை பாத்திரத்தில் ஏற்றிவிட்டு அ.சா.1–ஐ அசிங்கமாக பேசி, காலால் பாத்திரத்தை எத்திவிட்டு, சைக்கிள் செயினை வைத்து அ.சா.1–ன் வலது கை மணிகட்டில் அடித்து காயம் ஏற்படுத்தியும், 2வது எதிரி பேச்சியம்மாள் அ.சா.1–ஐ அசிங்கமாக பேசி, கையால் வாதியின் மார்பிலும், உடம்பிலும் அடித்து சாதாரண காயத்தினையும், அப்போது விலக்க வந்த அ.சா.1–ன் மாமனார் (ப.சா.2) சாத்தனை 1வது எதிரி முனியசாமி கல்லால் எறிந்து நெற்றியில் சாதாரண காயம் ஏற்படுத்தி, கொலைமிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளதாக 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன் கீழும், 2வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)–ன் கீழும் அரசு தரப்பில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இவ்வழக்கில் எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் கு.வி.மு.ச. பிரிவு 207-ன்படி எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கி போதிய அவகாசம் கொடுத்து கு.வி.மு.ச பிரிவு 240-ன்படி 28.12.2023 அன்று 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324 (2 எண்ணிக்கை), 506(2) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4-ன் கீழும், 2வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)-ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து வாசித்து விளக்கி வினவியபோது எதிரிகள் குற்றவாளி அல்ல என கூறி வழக்கு விசாரணைக்கு வேண்டினார்கள்.

3. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சான்று பொருள் எதுவும் முன்னிடப்படவில்லை.

**4. <u>அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம்</u>:-**

4(1). இந்த வழக்கின் புகார்தாரர் அ.சா.1 குருவம்மாள் கடந்த 08.10.2021ம் தேதியன்று மதியம் 11.00 மணியளவில் தனது வீட்டிற்கு வெளியே பாத்திரம் விளக்கிக் கொண்டிருந்தபோது 1வது எதிரி முனியசாமி பைக்கில் வந்து பாத்திரத்தில் ஏற்றியுள்ளார். அ.சா.1 ஏன் ஏற்றுகிறீர்கள் என்று கேட்டதற்கு அப்படி தாண்டி ஏத்துவேன் தேவுடியா, என்னடி பண்ணுவ என்று அசிங்கமாக திட்டியதால் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. சத்தம் கேட்டு அ.சா.1-ன் மாமனரான ப.சா.2 சாத்தன் வந்து ஏன் இப்படி

பண்ணுகிறீர்கள் என்று கேட்டதற்கு, கல்லை வைத்து மண்டையை உடைத்துவிட்டார். அதனால் அ.சா.1, ப.சா.2–ஐ திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு சென்றுள்ளார்.

4(2). அன்றைய தினம் மதியம் 1.15 மணியளவில் திருச்சுழி அரசு மருத்துவமனையில் அ.சா.6 மருத்துவர் கவிசெல்வி பணியில் இருந்தபோது, அ.சா.1 மற்றும் ப.சா.2 சாத்தன் ஆகியோர் சிகிச்சைக்கு வந்துள்ளனர். ப.சா.1 தெரிந்த மூன்று நபர்கள் கல்லால் சுமார் 12.30 மணியளவில் வீட்டில் வைத்து தாக்கியதாக தெரிவித்துள்ளார். ப.சா.2 சாத்தனை பரிசோதித்தபோது, அவருக்கு இடதுபக்க முன் தலையில் சிதைந்த காயம் 1x0.5x0.5 செமீ அளவில் காணப்பட்டது. அவருக்கு இரண்டு தையல் போடப்பட்டது. அவர் தலை வலிக்காக சிடி ஸ்கேன் எடுப்பதற்கு மேல்சிகிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கு உள்ள மருத்துவர் சான்றின்படி சாதாரண காயம் என்று காயசான்று **அ.சா.ஆ.3** வழங்கியுள்ளார்.

4(3). மேலும் அ.சா.1 தெரிந்த இரண்டு நபர்கள் கல்லால் சுமார் 12.30 மணியளவில் வீட்டில் வைத்து சைக்கிள் செயினால் அடித்தும், கடித்தும் தாக்கியதாக தெரிவித்துள்ளார். அ.சா.1 குருவம்மாளை பரிசோதித்தபோது, அவருக்கு வலது கை மணிக்கட்டில் 0.5x0.5 செமீ அளவில் சிராய்ப்பு காயம் இருந்தது. அவரை வெளிநோயாளியாக சிகிச்சை அளித்து அனுப்பி வைத்துள்ளார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று **அ.சா.ஆ.4** வழங்கியுள்ளார்.

4(4). மேலும் அ.சா.6 திரு.காளைச்சாமி கடந்த 08.10.2021ம் தேதியன்று மாலை 17.00 மணிக்கு திருச்சுழி காவல் நிலையத்தில் பணியிலிருந்தபோது, அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று,

நிலையம் வந்து 18.00 மணிக்கு புகாரின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.211/2021 இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5** பதிவு செய்துள்ளார். பின்னர் 09.10.2021ம் தேதியன்று காலை 8.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அ.சா.3 முத்துப்பாண்டி, ப.சா.6 கருப்பசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் **அ.சா.ஆ.6** மற்றும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.7** தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் அ.சா.1 குருவம்மாள், ப.சா.2 சாத்தன், அ.சா.4 காளிராஜ், அ.சா.2 அழகுமலை, அ.சா.3 முத்துப்பாண்டி, ப.சா.6 கருப்பசாமி ஆகியோர்களை தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4(5). பின்னர் 11.11.2021ம் தேதியன்று காயம்பட்ட அ.சா.1, ப.சா.2–க்கு சிகிச்சையளித்த திருச்சுழி அரசு மருத்துவர் திருமதி.கவிசெல்வியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயசான்று அ.சா.ஆ.3, அ.சா.ஆ.4 பெற்றுள்ளார். பின்னர் மேல்சிகிச்சையளித்த அருப்புக்கோட்டை அரசு மருத்துவர் திருமதி.அனிதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயசான்று **அ.சா.ஆ.8** பெற்றுள்ளார். எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் முன்பிணை பெற்றதால் கைது செய்யவில்லை. பின்னர் 05.01.2022ம் தேதி வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் தாக்கல் செய்துள்ளார்.

5. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையான சாட்சிகளுடன் அரசு தரப்பு விசாரணை முடிக்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சிகள் அளித்த

சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமான சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) இன் கீழ் 25.02.2026 அன்று வினவியபோது எதிரிகள் அரசு தரப்பு சாட்சியங்களை பொய் சாட்சிகள் என்றும், அவர்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள்.

6. **இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாதெனில்,** 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324 (2 எண்ணிக்கை), 506(2) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன் கீழும், 2வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)–ன் கீழும் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் சான்றாவணங்கள் வாயிலாக அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

7. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**8. <u>பரிசீலனையும், தீர்வும்</u>:–**

8(1). கடந்த 07.10.2021ம் தேதி மதியம் 12.30 மணிக்கு வாதி குருவம்மாள் தனது வீட்டிற்கு முன்பாக பாத்திரம் விலக்கி கொண்டிருந்தபோது இருசக்கர வாகனத்தில் வந்த 1வது எதிரி முனியசாமி இருசக்கர வாகனத்தை பாத்திரத்தில் ஏற்றிவிட்டு வாதியை அசிங்கமாக பேசி, காலால் பாத்திரத்தை எத்திவிட்டு, சைக்கிள் செயினை வைத்து வாதியின் வலது கை மணிகட்டில் அடித்து காயம் ஏற்படுத்தியும், 2வது எதிரி பேச்சியம்மாள் வாதியை அசிங்கமாக பேசி, கையால் வாதியின் மார்பிலும், உடம்பிலும் அடித்து சாதாரண காயத்தினையும், அப்போது விலக்க வந்த வாதியின் மாமனார் சாத்தனை 1வது எதிரி முனியசாமி கல்லால் எறிந்து நெற்றியில் சாதாரண காயம் ஏற்படுத்தி, கொலைமிரட்டல் விடுத்துள்ளார்கள் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

**8(2). 1வது எதிரிக்கு எதிராக வனையப்பட்ட இதச பிரிவு 324(2 எண்ணிக்கை)–ன் கீழும், 2வது எதிரிக்கு எதிராக இதச பிரிவு 323–ன் கீழும் வனையப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை பார்வையிடுகையில்,**

இவ்வழக்கில் அ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்ட குருவம்மாள் காயம்பட்ட மற்றும் புகார்தாரர் சாட்சி ஆவார். ஆனால் அவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தன்னை எதிரிகள் அடித்ததாக எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும் 1வது எதிரி முனியசாமி பைக்கில் வந்து பாத்திரத்தின் மேல் இருசக்கர வாகனத்தினை ஏற்றினார் என்றும், அது தொடர்பாக கேட்டபோது அப்படிதான்டி ஏத்துவேன் தேவிடியா என்று அசிங்கமாக திட்டியதாகவும், அப்போது அங்கு வந்த அவரின் மாமனரான ப.சா.2 சாத்தனை எதிரி முனியசாமி கல்லை வைத்து மண்டையை உடைத்துவிட்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

8(3).இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சியான சாத்தன் அரசு தரப்பில் சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை. இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.4 காளிராஜ் இவ்வழக்கில் சம்பவம் பற்றி நேரடியாக தனக்கு தெரியாது என்றும், வாய்தகராறு என்று கேள்விபட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

8(4). அரசு தரப்பில் அ.சா.5 ஆக விசாரணை செய்யப்பட்ட மருத்துவர் கவிசெல்வி தனது சாட்சியத்தில் கடந்த 07.10.2021 ம் தேதி மதியம் 1.15 மணியளவில் சாத்தன் தன்னை தெரிந்த மூன்று நபர்கள் கல்லால் தாக்கியதாக முன்பக்க தலையில் 1x 0.5x 0.5 செமீ அளவில் சிதைந்த காயத்துடன் வந்தவரை அனுமதித்து, மேல் சிகிச்சைக்கு அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண

காயம் என்று அ.சா.ஆ.3 காயசான்று வழங்கியதாக தெரிவித்துள்ளார். மேலும் வலதுகை மணிகட்டில் 0.5.x 0.5 செமீ அளவில் சிராய்ப்பு காயத்துடன் வந்த அ.சா.1 குருவம்மாளுக்கு சிகிச்சையளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று அ.சா.ஆ.4 காயசான்று வழங்கியதாக தெரிவித்துள்ளார்.

8(5). மருத்துவர் அ.சா.5 கவிசெல்வி சாட்சியத்திலிருந்தும், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 காயசான்றுகளிலிருந்தும் சம்பவதினத்தன்று சாத்தன் தலையில் காயத்துடனும், அ.சா.1 குருவம்மாள் கையில் காயத்துடனும் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றுள்ளார்கள் என்பது தெளிவாகிறது. இருப்பினும், மேற்படி காயமானது எதிரிகளால் தான் ஏற்பட்டுள்ளது என்பதை அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளதா? என்பதை பார்வையிடுவது அவசியமென்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

8(6).எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் வாதிடும்போது, தரப்பினர்களுக்குள் ஏற்கனவே சொத்து சம்மந்தமாக உரிமையியல் பிரச்சனை இருந்து வருகிறது என்றும், 1ம் எதிரி அரசு துறையில் பணியாற்றி வருவதால் அவரது வேலைக்கு பாதகம் ஏற்படுத்த வேண்டும் என்றும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததால் தான் எதிரி பட்டா பிரித்து தருவார்கள் என்றும், வீட்டின் தாழ்வான ஓட்டில் முட்டி ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய்யாக புகார் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

8(7).ஒரு வழக்கில் காயம்பட்ட நபர்களின் சாட்சியத்தை எவ்வாறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் **Abdul Sayed v. State of Madhya Pradesh, (2010) 10 SCC 259,** எனும் வழக்கில்

பல்வேறு உச்சநீதிமன்ற முன்தீர்ப்புகளை சுட்டிக்காட்டி "காயம்பட்ட நேரில் கண்ட நபரின் (Injured Witness) சாட்சியத்தை உயர்பீடத்தில் வைக்கப்பட வேண்டும், ஏனெனில் அத்தகைய சாட்சி குற்றத்திற்கு நேரில் கண்ட சாட்சி மட்டுமல்ல, அவரே குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் ஆவார்" என்று கூறி "காயம்பட்ட நபரின் சாட்சியம் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், உறுதியான காரணங்கள் அல்லது முக்கிய முரண்பாடுகள் மற்றும் குறைபாடுகள் இல்லாமல் காயம்பட்ட நபரின் சாட்சியத்தை நிராகரிக்க கூடாது" என்று கூறியுள்ளது.

8(8).அதன்படி இவ்வழக்கினை பார்வையிடும்போது, அ.சா.1 குருவம்மாள் தனக்கு ஏற்பட்ட காயம் தொடர்பாக எந்தவித சாட்சியமும் இந்நீதிமன்றத்தில் அளிக்கவில்லை. ஆனால் தனது மாமனார் சாத்தனை 1ம் எதிரி கல்லால் அடித்து காயம் ஏற்படுத்தியதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் காயம்பட்ட சாட்சியான சாத்தன் அரசு தரப்பில் நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை. மேலும் எதன் காரணமாக சாத்தன் இந்நீதிமன்றத்தில் சாட்சியாக ஆஜர்படுத்தப்படவில்லை என்று எந்தவித விளக்கமும் அரசு தரப்பில் அளிக்கப்படவில்லை. மேலும் அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் 2ம் எதிரி பேச்சியம்மாள் சம்பவ இடத்திற்கு வந்ததாகவோ, அ.சா.1 குருவம்மாள் மற்றும் சாத்தனை அசிங்கமாக பேசியதாகவோ, அடித்ததாகவோ, கொலைமிரட்டல் விடுத்ததாகவோ எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை.

8(9).எனவே காயம்பட்ட சாட்சியான அ.சா.1–ன் நீதிமன்ற சாட்சியத்திற்கும் புகார்மனுவிற்கும் பெருமளவு முரண்பாடு உள்ள நிலையில் மற்றொரு காயம்பட்ட சாட்சி இந்நீதிமன்றத்தில் எவ்வித காரணமும் இன்றி விசாரணை செய்யப்படாமல் விட்டொழிக்கப்பட்டுள்ள

நிலையில், சம்பவத்திற்கு கண்ணுற்ற சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.4 காளிராஜ் சம்பவம் பற்றி கேள்விப்பட்டதாக பிறழ்சாட்சியமாகியுள்ள நிலையில் உண்மையில் அரசு தரப்பில் தெரிவித்துள்ளவாறு சம்பவம் நடைபெற்றதா என்பது சந்தேகத்திற்கிடமாக உள்ளது. மேலும் தங்களுக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து தாங்களே நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்காத நிலையிலும், நீதிமன்றத்தின் முன் சமர்பிக்கப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்தும் எதிரிகள் தான் அ.சா.1 குருவம்மாள் மற்றும் ப.சா.2 சாத்தனுக்கு காயம் ஏற்படுத்தினார்கள் என்று முடிவு செய்ய இயலாது.

8(10).மேலே கண்ட விவாதங்களின் படி 1வது எதிரிக்கு எதிராக வனையப்பட்ட இதச பிரிவு 324 (2 எண்ணிக்கை)–ன் கீழும், 2வது எதிரிக்கு எதிராக வனையப்பட்ட பிரிவு 323–ன் கீழான குற்றச்சாட்டினை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய தவறிவிட்டது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9). <u>1, 2 எதிரிகளுக்கு எதிராக வனையப்பட்ட இதச பிரிவு 294(பி)–ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை பார்வையிடுகையில்,</u>

9(1). இவ்வழக்கினை பொறுத்த வரையில் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில் 1வது எதிரி இருசக்கர வாகனத்தில் வந்து பாத்திரத்தின் மீது ஏற்றினார் என்றும், " ஏன் ஏற்றுகிறீர்கள் என்று கேட்டதற்கு **அப்படிதான்டி ஏத்துவேன் தேவிடியா என்று அசிங்கமாக திட்டி என்னடி பண்ணுவ என்று கேட்டார்**. வாக்குவாதம் நடந்தது" என சாட்சியம் அளித்துள்ளார். 2ம் எதிரி சம்பவத்தின்போது தன்னை அசிங்கமாக பேசியதாக எந்தவித சாட்சியமும் அ.சா.1 அளிக்கவில்லை. மேலும் அ.சா.1 குருவம்மாளை தவிர வேறு எந்த

அரசு தரப்பு சாட்சிகளும் எதிரிகள் அசிங்கமாக பேசியதாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

9(2). இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294 ஆனது பின்வருமாறு:

> "294. Obscene acts and songs —Whoever, to the annoyance of others— (a) does any obscene act in any public place, or (b) sings, recites or utters any obscene song, ballad or words, in or near any public place, shall be punished with imprisonment of either description for a term which may extend to three months, or with fine, or with both."

9(3). இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 294(பி)–ன் கீழ் ஒருவரை தண்டிக்கவேண்டுமெனில், அந்த குற்றம் கீழ்கண்ட இரண்டு உட்கூறுகளும் நிறைவு செய்திருக்க வேண்டும்.

**a).** எதிரி அசிங்கமான வார்த்தையைச் சொல்லி திட்டும்போது மேற்படி வார்த்தையால் மற்றவர்களுக்கு அருவறுப்போ அல்லது அசிங்கமோ ஏற்பட்டிருக்க வேண்டும்.

**b).** மேற்படி ஆபாசமான வார்த்தையானது பொது இடத்திலோ அல்லது பொது இடத்திற்கு அருகிலோ சம்பந்தப்பட்ட எதிரியால் சொல்லப்பட்டிருக்க வேண்டும்.

9(4). மேலும் இது குறித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் **K.Jeyaramanuju Vs. Janakaraj & anr., 1996(1) CTC 470 Dt.15.02.1996** வழக்கில்

> "To prove the offence under Section 294 of IPC mere utterance of obscence words are

> not sufficient but there must be a further proof to establish that it was to the annoyance of others, which is lacking in the case."

என தெரிவித்துள்ளது.

9(5). மேற்படி மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் படி பொது இடத்தில் வைத்து அசிங்கமான வார்த்தைகள் உபயோகிப்பது மட்டும் பிரிவு 294(பி) இதச–ன் கீழ் தண்டணைக்குரிய குற்றம் ஆகாது. அந்த வார்த்தையினால் மற்றவர்களுக்கு அருவறுப்போ, அசிங்கமோ ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதும் அதற்கான முக்கிய உட்கூறாகும் என்பது தெளிவாகிறது.

9(6). இவ்வழக்கினை பொறுத்தவரை அரசு தரப்பு சாட்சியின் படி 1ம் எதிரி அ.சா.1/புகார்தாரரை அசிங்கமாக பொது வெளியில் திட்டியதாக வாதத்திற்காக எடுத்துக்கொண்டாலும், அந்த அசிங்கமான வார்த்தைகளால் மற்றவர்களுக்கு அசிங்கமோ அல்லது அருவறுப்போ ஏற்பட்டதாக எந்தவித சாட்சியமும் அரசு தரப்பில் அளிக்கப்படவில்லை. அ.சா.1 குருவம்மாள் 1ம் எதிரி அசிங்கமான வார்த்தைகளால் திட்டியதாக சாட்சியம் அளித்திருந்தாலும், அதனால் தனக்கு அசிங்கமோ, அருவறுப்போ ஏற்பட்டதாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. எனவே அரசு தரப்பில் சம்பவத்திற்கு கண்ணுற்ற சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.4 காளிராஜ் அசிங்கமான வார்த்தை குறித்து சாட்சியம் அளிக்காத நிலையிலும், மற்றொரு காயம்பட்ட சாட்சியான ப.சா.2 சாத்தன் விசாரணை செய்யப்படாத நிலையிலும் எதிரிகள் 294(பி) இதச–ன் கீழ் குற்றம் புரிந்தார்கள் என்று முடிவு செய்ய இயலாது.

9(7).மேலே கண்ட விவாதங்களின் 1, 2 எதிரிகளுக்கு எதிராக வனையப்பட்ட இதச பிரிவு 294(பி)–ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டினை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய தவறிவிட்டது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**10). <u>1, 2 எதிரிக்கு எதிராக வனையப்பட்ட இதச பிரிவு 506(2)–ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதா? என்பதை பார்வையிடுகையில்,</u>**

10(1). புகார்தாரரான அ.சா.1 நாகலட்சுமி தனது புகார்மனுவில் அ.சா.1 தன்னை எதிரிகள் இருவரும் கொல்லாமல் விடமாட்டோம் என கொலைமிரட்டல் செய்துவிட்டு சென்றதாக தெரிவித்திருந்தாலும், தனது முதல் விசாரணை சாட்சியத்தில் எதிரிகள் தன்னை பார்த்து மிரட்டியதாக எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை.

10(2). இவ்வழக்கில் எதிரிகள் அ.சா.1/புகார்தாரரை சம்பவ தினத்தன்று கொலை மிரட்டல் செய்ததாக புகார்மனுவில் தெரிவித்துள்ளதை வாதத்திற்காக எடுத்துக் கொண்டாலும், கொலை மிரட்டல் என்பது வெறும் வார்த்தைகளில் இல்லாமல் அது யாருக்கு எதிராக செய்யப்பட்டதோ அவருக்கு ஒரு அச்சத்தை உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் **Noble Mohandass Vs State, reported in 1988 [2] MWN Crl 184** என்ற வழக்கில் தெரிவித்துள்ளது.

> "Threat should be a real one and not just a mere word when the person uttering it does exactly mean what he says and also when the person at whom thereat is launched does not feel threatened actually."

மேற்படி கருத்தை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் **Karuppusamy vs State Rep By Deputy Superintentent of Police CRL.A(MD) No.142 of 2020, dated 14 November, 2024** என்ற வழக்கில் மீண்டும் உறுதிபடுத்தியுள்ளது.

10(3). மேலும் எதிரிகள் கொலைமிரட்டல் விடுத்ததாக அ.சா.1 குருவம்மாள் நீதிமன்றத்தில் சாட்சியம் எதுவும் அளிக்காத நிலையில் உண்மையில் சம்பவ தினத்தில் எதிரிகள் அ.சா.1–ஐ சம்பவத்தின்போது கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும், அதனால் அவருக்கு உயிர்பயம் ஏற்பட்டது என்று முடிவு செய்ய இயலாது.

10(4).மேலே கண்ட விவாதங்களின் 1, 2 எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவு 506(2)–ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டினை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய தவறிவிட்டது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**11) <u>1வது எதிரிக்கு எதிராக வனையப்பட்ட தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4–ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதா? என்பதை பார்வையிடுகையில்</u>,**

11(1).மேலே கண்ட விவாதங்களின் படி புகார்தாரர் தனது சாட்சியத்தில் 1ம் எதிரி தன்னை அடித்ததாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும் எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. ஆனால் தன்னை அசிங்கமாக பேசியதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் தனது புகார் மனுவிலும் 1வது எதிரி தன்னை அசிங்கமாக பேசியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4 ஆனது

4. Penalty for harassment of women.—

Whoever commits or participates in or abets harassment of women in or within the precincts of any educational institution, temple or other place of worship, bus stop, road, railway station, cinema theatre, park, beach, place of festival, public service vehicle or vessel or any other place shall be punished with imprisonment for a term which may extend to three years and with fine which shall not be less than ten thousand rupees.

என தெரிவித்துள்ளது.

11(2).எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டான தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் படி பெண்களுக்கு எதிரான தொந்தரவு (Harassment) என்பது:

1. கேலிச் சொற்கள் பேசுதல்
2. அநாகரிகமான நடத்தை
3. உடல் அல்லது மன ரீதியான தொல்லை
4. அச்சுறுத்தல், அவமதிப்பு ஏற்படுத்துவதாகும். மேற்படி தொந்தரவானது பொது இடங்கள் **வேலை இடங்கள்**, **கல்வி நிலையங்கள்**, **போக்குவரத்து இடங்கள்** ஆகியவற்றில் வைத்து நடைபெறும் போது அது மேற்படி சட்டத்தின் பிரிவு 4–ன் படி தண்டிக்கத்தக்க குற்றமாகும்.

11(3). இவ்வழக்கினை பொறுத்தவரை பொது இடத்தில் வைத்து பேசுவது தொந்தரவு என்று தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன் கீழ் தண்டிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

இருப்பினும், இவ்வழக்கில் அ.சா.1 குருவம்மாள் தனது புகார்மனுவிற்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில் சம்பவத்திற்கு கண்ணுற்ற சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.2 பிறழ்சாட்சியாகி உள்ள நிலையில், ஏற்கனவே புகார்தாரர் குடும்பத்திற்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் முன்பகை இருந்து வரும் நிலையிலும், உண்மையில் மேற்படி சம்பவம் நடைபெற்றது என்று அரசு தரப்பில் நிரூபணம் செய்யாத நிலையிலும், இவ்வழக்கின் சூழ்நிலையயை பொறுத்தவரை 1ம் எதிரி தன்னை பொது இடத்தில் வைத்து அசிங்கமாக திட்டினார் என்ற அ.சா.1 குருவம்மாளின் சாட்சியம் மட்டும் எதிரி குற்றமிழைத்தார் என்று முடிவு செய்ய போதுமானதாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

11(4). புகார்தாரர் சாட்சியான அ.சா.1–ஐ தவிர வேறு சாட்சிகள் யாரும் 1ம் எதிரி பொது இடத்தில் வைத்து அ.சா.1–ஐ அசிங்கமாக பேசினார் என சாட்சியம் அளிக்காத நிலையில், 1ம் எதிரி அ.சா.1–ஐ அசிங்கமாக பேசி வன்கொடுமை புரிந்தார் என்று முடிவு செய்ய இயலாது.

11(5). மேலே கண்ட விவாதங்களின் 1ம் எதிரிக்கு எதிராக தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4–ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டினை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய தவறிவிட்டது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக,**

12. எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து, 1வது எதிரி இதச பிரிவுகள் 294(பி), 324 (2 எண்ணிக்கை), 506(2) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4–ன் கீழும், 2 வது எதிரி இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)–ன் கீழும் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

13. இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால் சான்று பொருட்கள் குறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு **2026ம் ஆண்டு மே மாதம் 21ம்** நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரிப்பட்டது.

ஓம்/–S.வேல்சூர்யா (21.05.2026)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | குருவம்மாள் |
| அ.சா.2 | அழகுமலை |
| அ.சா.3 | முத்துப்பாண்டி |
| அ.சா.4 | காளிராஜ் |

| | |
|---|---|
| அ.சா.5 | கவிசெல்வி |
| அ.சா.6 | திரு.காளைச்சாமி (சார்பு ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார்வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.3–ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | திருச்சுழி அரசு மருத்துவர் ப.சா.2 சாத்தனுக்கு விபத்து பதிவேட்டில் வழங்கிய காயசான்று |
| அ.சா.ஆ.4 | திருச்சுழி அரசு மருத்துவர் அ.சா.1 குருவம்மாளுக்கு விபத்து பதிவேட்டில் வழங்கிய காயசான்று |
| அ.சா.ஆ.5 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.7 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.8 | அருப்புக்கோட்டை அரசு மருத்துவர் ப.சா.2 சாத்தனுக்கு விபத்து பதிவேட்டில் வழங்கிய காயசான்று |

**அரசு தரப்பு சான்று பொருட்கள் :–** இல்லை.

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணம், சான்றுபொருள்:–** இல்லை

ஓம்/–S.வேல்சூர்யா (21.05.2026)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

__குறிப்பு:–__

1. எந்த ஒரு சாட்சியும் விசாரணைக்கு 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு

தெரிவிக்கப்பட்டது.

3. வழக்கின் விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தனர்.

4. எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவு CRL OP(MD).No.15837/2021, நாள்.12.10.2021–ன்படி முன்பிணை பெற்று, 08.11.2021ம் தேதியன்று திருச்சுழி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்து சென்றுள்ளனர். எதிரிகள் இவ்வழக்கில் எழுதிக்கொடுத்த பிணைமுறியை மேல்முறையீடு காலத்திற்கு பிறகு ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

5. இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால் சான்று பொருட்கள் குறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

ஒம்/–S.வேல்சூர்யா (21.05.2026)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.